Original Suit No.521/2017 நாள்: 26.09.2022

வா.சா1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதி எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். அவர் ஊருக்கும் என் ஊருக்கும் இடையே 2 கி.மீ தொலைவு. அவர் ஷேர் மார்க்கெட் தொழில் செய்து வருகிறார். எந்த முகவரியில் என்ன பெயரில் அந்த தொழிலை செய்து வந்தார் என்றால் அது குறிப்பாக தெரியாது ஆனால் ஹர்ஷா டவர், திரு.வி.க சாலையில் ஒரு அறை எடுத்து அந்த தொழிலை செய்து வந்தார். நான் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாய தொழில் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழிலை காட்டக்கூடிய வகையில் ஆவணம் எதுவும் இல்லை. எனது பெயரில் விவசாய நிலங்கள் உள்ளன என்பதை காட்டக்கூடிய வகையில் ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்து வருகிறார் என்பதை நான் தெரிந்து கொண்டேன். நான் பி.ஏ Geography கரூர் அரசு கலைக்கல்லூரியில் படித்தேன். வழக்குரையில் சொல்லியுள்ள முகவரியில் வசிக்கும் சுப்பிரமணியம் என்பது நான் தான். என்னிடம் காட்ப்படும் பதிவு சான்றிதழ் சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் நான் பங்குதாரராக உள்ளேன் அந்த பதிவு சான்றிதழ் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய பிரதான தொழில் பைனான்ஸ் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 நிறுவனத்தின் தொழில் வட்டிக்கு பணம் கொடுப்பது தான். பிரதிவாதி குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும். வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதையும் நான் பிரதிவாதிகக்கு அனுப்பவில்லை. அதற்கு ஏதேனும் காரணங்கள் உள்ளதா என்றால் அவர் சொத்தை விற்க முயற்சி செய்தார் ஆகவே உடனே வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். இந்த விபரத்தை எனது வழக்குரையிலோ, முதல் விசாரணைக்கான நிரூபண சாட்சியத்திலோ சொல்லவில்லை.

பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.